176. பொருத்துக.

a) நேர்கோட்டுப் பண்பு - i) பளபளப்பான பரப்பு


b) சமதள ஆடி - ii) உயிரி ஒளிர்தல்

c) மின்மினிப்பூச்சி - iii) ஒளிராப் பொருள்

d) நிலா - iv) கிரகணம்

1. a - ii b - I c - iv d - iii
2. a - iii b - I c - iv d - ii
3. a - iv b - I c - ii d - iii
4. a - I b - iii c - iv d - ii

177. படத்திலுள்ளது போல் ஒருவரால் வளைகுழாயின் வழியாக மெழுகுவர்த்தியின் ஒளியைக் காண முடிகிறது எனில், குழாய் எப்பொருளால் ஆனது?



1. நெகிழி
2. கண்ணாடி
3. ஒளி இழை
4. ஒளி நேர்கோட்டில் செல்லும். எனவே, எவற்றைக் கொண்டும் அவ்வாறு ஒளியைக் காண இயலாது.

178. குழி ஆடியில் பொருளை C - க்கும், F - க்கும் இடையில் வைத்தால், கிடைக்கும் பிம்பமானது

1. மிகச்சிறியது
2. மிகப் பெரியது
3. பெரியது
4. பொருளின் அளவுக்குச் சமம்

179. ஒளி விலகல் எண்ணின் அலகு ______.

1. டயாப்டர்
2. மீட்டர்
3. மீட்டர் / வினாடி
4. அலகு இல்லை

180. பின்வருவனவற்றுள் எது பகுதி ஒளி ஊடுருவும் பொருள்?

(1) சில துளிகள் பால் கலந்த நீர்
(2) மரம்
(3) கண்ணாடி
(4) கண் கண்ணாடி

181. பொருளின அளவும் பிம்பத்தின் அளவும் சமமாக இருந்தால் பொருள் வைக்கப்பட்டுள்ள இடம்.

(1) ஈறிலாத் தொலைவு
(2) F ல்
(3) P, F க்கு இடையே
(4) C ல்

182. பொருத்துக.

a) குவி ஆடி - i) பின்னோக்குப் பார்வை ஆடி

b) பரவளைய ஆடி - ii) ரேடியோ தொலைநோக்கிகள்

LIVEWORKSHEETS

c) ஸ்நெல் விதி - iii) வானவில்

d) நிறப்பிரிகை - iv) $sini/sinr$=μ

(1) a - ii b - i c - iv d - iii

(2) a - iii b - i c - iv d - ii

(3) a - i b - ii c - iv d - iii

(4) a - i b - iii c - iv d - ii

**NMMS தேர்வில் கேட்கப்பட்ட வினாக்கள்:**

183. ஒரு குவி ஆடி தலைகீழ் பிம்பத்தை ஏற்படுத்தும் நிலை (NMMS-2011)

(1) எந்த ஒரு நிலையிலும் தலைகீழ் பிம்பத்தை ஏற்படுத்தாது.

(2) பொருள் ஆடியிலிருந்து வெகு தொலைவில் உள்ள பொழுது.

(3) பொருள் ஆடியின் வளைவு மையத்தில் உள்ள பொழுது.

(4) பொருள் ஆடியின் முக்கிய மையத்தில் உள்ள பொழுது.

184. ஒளிக்கதிர் ஓர் எதிரொளிக்கும் தளத்தில் பட்டு எதிரொளிக்கும் பொழுது படுகோணத்தின் மதிப்பு $45^0$ எனில், படுகதிருக்கும் எதிரொளிப்புக் கதிருக்கும் இடைப்பட்ட கோணம் (NMMS-2011)

(1) $45^0$ (2) $90^0$ (3) $120^0$ (4) $0^0$

185. வெள்ளை நிற ஒளி ஏழு வண்ணங்களாகப் பிரியும் நிகழ்வு _______ என அழைக்கப்படுகிறத (NMMS-2014)

(1) ஒளிவிலகல் (2) ஒளி எதிரொளிப்பு (3) நிறப்பிரிகை (4) ஒளிச்சிதறல்

186. பல் மருத்துவர்கள் பயன்படுத்தும் ஆடியின் பெயர் _______. (NMMS EXAM 2015 - 2016)

(1) சமதள ஆடி (2) குவி ஆடி (3) இரு குவி ஆடி (4) குழி ஆடி

187. வைரம் மின்னுவதற்கு காரணம் _______. (NMMS 2015 - 2016)

(1) எதிரொளிப்பு (2) ஒளிவிலகம்

(3) முழு அக எதிரொளிப்பு (4). ஏதுமில்லை

188. கண் குறைபாடற்ற மனிதனின் மீச்சிறு பார்வை உணரும் தொலைவு _______ (NMMS 2016)

(1) 15 செ.மீ. (2) 20 செ.மீ. (3) 25 செ.மீ. (4). 10 செ.மீ.

189. EXAMINATION என்ற வார்த்தையின் சமதள ஆடி பிம்பம் _______. [NMMS-2016]

(1) 

(2) 

(3) 

(4) EXAMINATION

LIVEWORKSHEETS

190. கோளக ஆடி ஒன்றியன் வளைவு ஆரம் 30 செ.மீ. எனில் அதன் குவியத் தொலைவினைக் காண்க (NMMS 2019 - 2020)

(1) 15 செ.மீ (2) 25 செ.மீ (3) 20 செ.மீ (4). 10 செ.மீ

191. சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும் (NMMS 2019 - 2020)

(1) குவி ஆடி - ஆம்புலன்ஸ்

(2) குழி ஆடி - சூரிய அடுப்பு

(3) நியூட்டன் வட்டு - வாகனங்களின் முகப்பு விளக்கு

(4). பின்னோக்கு ஆடி - நிறப்பிரிகை

192. ஒரு ஒளி ஊடுருவும் கண்ணாடியின் ஒளிவிலகல் எண் 1.5 எனில், அதன் வழியே செல்லும் ஒளியின் திசை வேகம்: (NMMS - 2020 - 21)

(1) $4 \times 10^8\ ms^{-1}$ (2) $2 \times 10^8\ ms^{-1}$ (3) $3 \times 10^8\ ms^{-1}$ (4). $1.9 \times 10^9\ ms^{-1}$

193. ஆடிகளில் தோன்றும் பிம்பங்களின் எண்ணிக்கை ஆடிகளுக்கிடையே உள்ள _______ சார்ந்தது. (NMMS 2020 - 21)

(1) சாய்வுக் கோணத்தை (2) தளக் கோணத்தை

(3) படு கோணத்தை (4). விடு கோணத்தை

194. கூற்று I: அனைத்துப் பொருட்களும் நிழல்களை உருவாக்குவதில்லை

கூற்று II: நிழல்கள் எப்போதும் ஒளிமூலம் இருக்கும் திசைக்கு நேர்த்திசையில் உருவாகும் (NMMS EXAM) - (2020 - 21)

(1) கூற்று I மற்றும் II சரி (2) கூற்று I தவறு ஆனால் II சரி

(3) கூற்று I மற்றும் II தவறு (4). கூற்று I சரி ஆனால் II தவறு

LIVEWORKSHEETS